www.tamilarangam.net

வீரகேசரி 1-5-1984

# 'உமாவின் 2-வது தளபதியே கொலையுண்டவர்'

## மந்திரி லலித் தகவல்


(அன்டன் எட்வேர்ட்)

மட்டக்களப்பு கல்லாற்றில் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டவர் உமா மகேஸ்வரனின் தலைமையில் இயங்கும் தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கத் (புளொட்)தின் 2ஆவது தளபதியான இராஜதுரை ஜெயச்சந்திரனே! (வயது 28) என்று தேசிய பாதுகாப்பு அமைச்சரான திரு. லலித் அத்துலத் முதலி நேற்று மாலை நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். அண்மைக் காலமாக இங்கு நடந்த பயங்கரவாதங்களுக்கும் இவரே தலைமை தாங்கிவந்தார்' என்றும் அமைச்சர் சொன்னார்.

இவரே மட்டக்களப்பு சிறை உடைப்புக்கும் காரண கர்த்தாவாக இருந்தவர் என்றும் குறிப்பிட்ட அமைச்சர் 'திருமலையில் இயங்கிய காந்தீய இயக்கத்தின் லிகிதராகக் கடமையாற்றி வந்தார். 1982 ஜூலை மாதத்தின் பின்னர் 'உமா கோஷ்டி'யில் சேர்ந்து 'தீவிரமாகச்' செயற்பட்டார்' என்றார்.

'பார்த்தன்' என்ற பெயரும் இவருக்கு உண்டு. பயிற்சிக்காக ஆட்சேர்க்கும் பணியிலும் இவர் ஈடுபட்டு வந்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க நாம் கங்கணம் கட்டி நிற்கும் இவ்வேளையில் தொடர்ந்தும் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதில் பயன் இல்லை. எனவே சர்வகட்சி மாநாடு நடைபெறவிருக்கும் இவ்வேளையில் தொடர்ந்தும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென்று பயங்கரவாத இயக்கத்தில் சேர்ந்திருப்போரை கேட்டுக்கொள்கிறேன் என்றும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.



4-5-84 வீரகேசரி

## யாழ்நகரில் சுவரொட்டிகள்

யாழ்நகர்,

யாழ்நகரில் நேற்றுச் சுவரொட்டிகள் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன. மட்டக்களப்பில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட ராஜ் ஜெயச்சந்திரனுக்கு வீர அஞ்சலி என்று தலைப்பிட்டு இச்சுவரொட்டிகள் காணப்பட்டன.

# யாழ். குடாநாட்டுக்கு வெளியே 'உமா' குழு சக்தி பெற்றுள்ளது'

## அமைச்சர் லலித் கூறுகிறார்

2.5.84 வீரகேசரி

(அன்டன் எட்வேர்ட்)

வடபகுதி பயங்கரவாதிகளுக்கு மன்னிப்பு வழங்கத் தயார் என்றும் உமாமகேஸ்வரனின் குழு யாழ்.குடாநாட்டுக்கு வெளியே சக்திவாய்ந்ததாக இருப்பதாகவும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வர்த்தக கப்பற்றுறை அமைச்சில் தமது பழைய அறையில் அவர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இம்மாநாட்டில் நிருபர்கள் அவரிடம் கேட்ட சில கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி: வடபகுதி தீவிரவாதிகளுக்கு மன்னிப்பு வழங்க தயாரா?

பதில்: மன்னிப்பு வழங்க தயாராக இருக்கிறேன்.

கேள்வி: இதுவரை எத்தனை பயங்கரவாதிகள் கைது செய்யப் பட்டுள்ளனர்?

பதில்: அது பற்றி உறுதியாக கூறுவதற்கில்லை.

கேள்வி: இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. வெங்கட்ராமன் 'இலங்கைக்கு இராணுவம் அனுப்புவது இதுவல்ல சந்தர்ப்பம்' என குறிப்பிட்டுள்ளாரே?

பதில்: சரியாகத்தான் கூறியுள்ளார்.

கேள்வி: சந்தர்ப்பம் இதுவல்ல என்று தானே கூறியுள்ளார். வேறு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அனுப்பலாம் தானே?

பதில்: அந்த சந்தர்ப்பம் வரும்போது பார்க்கலாமே (சிரித்துக் கொள்கிறார்)

கேள்வி: உமாமகேஸ்வரனின் இயக்கம் தானா தற்போது பலம் மிகுந்தது?

அமைச்சர்: இல்லை. வடக்கில் அதாவது யாழ். குடாநாட்டில் மற்றைய இயக்கம் பலமாக உள்ளது. குடாநாட்டுக்கு வெளியே உமா குழுவுக்கு பலம் அதிகம்.

கேள்வி: அவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: இனப்பிரச்சினை தீர்க்கப்படவுள்ள இந்த நேரத்தில் நாட்டின் சமாதானத்தை கருதி பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்பதே?

கேள்வி: மேலதிகமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டுள்ளனவா?

பதில்: ஆம் உஷார் படுத்தப் பட்டுள்ளன. எத்தகை நிலைமையையும் சமாளிக்கத் தயார்!

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

செய்தி - தொடர்பு திணைக்களம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ இலங்கைத் தமிழர் பிரச்சினை

கேசரி. 5-5-84.

# இந்திராவுடன் எம்.ஜி.ஆர். தலைமையில் தமிழக தலைவர்கள் இன்று பேச்சு



சென்னை,

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழகத் தலைவர்கள் இன்று காலை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள்.

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான தமிழகத் தலைவர்களின் இப்பேச்சுவார்த்தை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பேச்சுவார்த்தைக்கென தமிழகத் தலைவர்கள் நேற்று மாலை சென்னையில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டுச் சென்றனர். பேச்சுவார்த்தை பிரதமர் இந்திராவின் இல்லத்தில் நடைபெறும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமர் இந்திராவை தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களும் சந்திப்பதென்று முன்னர் தீர்மானிக்கப்பட்டது தெரிந்ததே. அந்த தீர்மானத்தின் படியே இன்றைய சந்திப்பு நடைபெறுகிறது.

முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் சென்றுள்ள குழுவில் பத்து தலைவர்கள் இடம்பெறுகிறார்கள்.

கடந்த மாதம் 17ஆம் திகதி தமிழக சட்டசபைக் கட்சிகளின் தலைவர்களையும் மறுநாள் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் தமிழக முதல்வர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் சந்தித்துப் பேசினார். இப் பேச்சுகளில் தி. மு. க., வீரமணியின் தி.க., நெடுமாறன் காங்கிரஸ் போன்ற சில கட்சிகள் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் அவை தங்கள் கருத்துக்களை எழுத்து மூலம் முதல்வரிடம்

(5ஆம் பக்கம் பார்க்க)



## புதுடில்லி---

[ தொடர்ச்சி ]

அளித்திருந்தன.

இதனைத் தொடர்ந்து 23, 24 ஆம் திகதிகளில் இரு கட்டங்களாக முதல்வர் திரு.எம். ஜி. இராமச்சந்திரன் தமிழீழ விடுதலை அமைப்புக்களைச் சந்தித்துப் பேசினார்.

அதற்கு முன்னர் புதுடில்லி சென்றிருந்த முதல்வர் அங்கு பிரதமர் திருமதி காந்தியை சந்தித்து அனைத்துக் கட்சி முடிவுகளை அவரிடம் எடுத்துக்கூறி கட்சித்தலைவர்கள் பிரதமரைச் சந்திப்பதற்குரிய நாள் ஒன்றை குறித்துத் தருமாறு கேட்டிருந்தார்.

கட்சித் தலைவர்கள் முடிவுகளில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமர் திருமதி காந்தி இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தனவை நேரில் சந்தித்துப்பேசி தீர்வு ஒன்றை விரைவில் காணவேண்டும் என்பது ஒன்றாக அமைந்தது தெரிந்ததே. இக்கருத்தை பாரதீய ஜனதா கட்சி தலைவர்களில் ஒருவரான திரு. எல்.கே. அத்வானியும் வலியுறுத்தியிருந்தார்.

எதிர்வரும் புதன்கிழமை கூடவிருக்கும் வட்டமேசை மாநாட்டின் மூலம் சமரசப் பேச்சுகளை வேகமாக நடத்தி இலங்கையின் இனப்பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வு காண பிரதமர் காந்தி தன்னாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு கூடிய விரைவில் இலங்கைத்தமிழர்களுக்கு நிவாரணம், நிம்மதி, உறுதிபடுத்தப்பட்ட பாதுகாப்பு போன்றவற்றை பெற்றுத்தர வேண்டும் எனவும் கட்சித்தலைவர்கள் வேண்டுகோள் விடுக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
செய்தி - தொடர்பு திணைக்களம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்